13th March 1961]

SRI N. S. RAMALINGAM : தஞ்சாவூரில் ஆரம்பிக்கப்பட்ட சூபர்பாஸ்பேட் தொழிற்சாலையைப்போல், நாகப்பட்டினத்திலும் ஆரம்பிக்க யோசனை உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இம்மாதிரி ஆரம்பிக்க லைசன்ஸ் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. ஆனால் அங்கே வைக்கவேண்டும் என்பதுதான் சர்க்காரின் விருப்பம்.

SRI K. PERIANNAN : பெரம்பலூர் தாலுக்காவிலும் ஏராளமான உரத் தொழிற்சாலைக்கு வேண்டிய கனிப்பொருள்கள் கிடைப்பதனால் அங்கே ஒரு உர உற்பத்திசாலை ஆரம்பிப்பதற்கு முன்வருமா ? இதைப்பற்றி விண்ணப்பம் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதுமாதிரி இந்தப் பகுதியிலும் மற்றப்பகுதியிலும் மனுப்போடவில்லை.

Ministers' tours

* 798 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Chief Minister be pleased to state whether the Government have taken a decision—

(i) to stop the practice of Ministers travelling in private cars while on tour in the districts and

(ii) to provide Government cars on such occasions?

THE HON. SRI C. SUBRAMANIAM : (i) Ministers use private cars for their tours in the districts only on those occasions when Government cars are not available.

(ii) No Sir. It would not be economical to have a separate Government car reserved solely for the use of Ministers, while touring each district.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் கார்கள் இல்லாதிருக்கிறபோது தனியார் கார்களில் செல்வதாக கனம் அமைச்சர் அவர்கள் சொன்னர். கலெக்டர்கள் கார்கள் இருக்கின்றன. பீ.டீ.ஓ. கார்கள் இருக்கின்றன, ஆகவே அமைச்சர்கள் சுற்றுப்பிரயாணம் செய்கிறபோது அவைகளை ஏன் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கலெக்டர் கார் அவர்கள் உபயோகத்திற்கு. அவர்கள் கார்களை கேட்டு வாங்கும் நிலையில் நாங்கள் இப்பொழுது இல்லை.

Technical College

* 799 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா தேனியில் தென்னடு டெக்னிக்கல் காலேஜ் சர்க்கார் அங்கீகாரம் பெற்றது என பத்திரிகையில் விளம்பரம் செய்வதை சர்க்கார் அறியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir. No such advertisement has come to the notice of the Government.